தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.

மோ.வா.வி.இ.கோ. அசல் மனு எண்.28/2023

ஆர்.டபிள்யூ.1 - இன் வாக்குமூலம்

*****

2024 ஆண்டு ஏப்ரல் வியாழன் 25-ம் நாள் மனுதாரர்/எதிர்மனுதாரர் என்பரின் சாட்சியான வாக்குமூலம் 1956 ஆண்டு 10 வது விதியின்படி திரு.S.வடிவேல்முருகன், பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜாராம் | தந்தை/கணவர் பெயர் | : |
| கிராமம் | : | தாலுகா | : |
| ஜாதி | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

---

**முதல் விசாரணை**

<u>25.04.2024</u>

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இறந்த நபருக்கு வழங்கப்பட்ட பிரேத விசாரணை அறிக்கை சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.1** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டும்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

மேற்படி விபத்து சம்மந்தமாக எனது கவனக்குறைவால் நடந்தது என்று முதல் தகவல் அறிக்கை என் மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி விபத்து சம்மந்தமாக குற்ற அறிக்கையும் என் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இந்த விபத்து சம்மந்தமான வழக்கு நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது

என்றால் சரிதான். விபத்து 29.09.2015 அன்று காலை 9.45 முதல் 10.30 மணியளவில் நடந்தது. விபத்து நடந்த சமயத்தில் நான் சிவகங்கையிலிருந்து வாணியங்குடி சென்றேன். அது வடக்கிலிருந்து தெற்கே செல்லும் ரோடாகும். மேற்படி சாலையில் நான் வடக்கிலிருந்து தெற்கே செல்ல வேண்டும் என்றால் இடதுபுறமாக கிழக்கு பக்கமாக செல்ல வேண்டும். ம.சா.ஆ.4 ஆவணத்தில் காட்டப்பட்ட மாதிரி வரைபடத்தில் மேற்படி விபத்தும் மேற்படி சாலையில் மேற்கு பக்கமாக நடந்தது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக இறந்த நபரின் பெற்றோர்கள் என்னிடம் மருத்துவ செலவிற்கு பணம் கேட்டார்கள். அவர்கள் கேட்ட தொகை ரூ.1,00,000 என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் ரூ.35,000/- கேட்டார்கள் நான் ரூ.25,000/- கொடுத்தேன். நாங்கள் தருவதாக சொன்ன ரூ.1,00,000 த்தை சொன்ன காலத்தில் கொடுக்க முடியாததால் என் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் நாங்கள் தாக்கல் செய்த எதிருரையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதே போல் தற்போது தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள ரூ.25,000/- கொடுத்தது தான் உண்மை. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் ரூ.20,000/- கொடுத்தேன் என்பது பொய் ஆகும். மனுதாரர்கள் எழுதிக் கொடுத்தாக சொல்லும் ஆவணங்களில் உள்ள தொகை எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி

விபத்து நடந்த நேரம் காலை 9.45 முதல் 10.30 மணிக்குள் இருக்கும். மனுதாரர்கள் எங்களுக்கு எழுதிக் கொடுத்தாக சொல்லும் ஆவணத்தில் காலை சுமார் 8.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர்கள் எங்கள் தரப்பிலிருந்து எந்த தொகையும் கொடுக்கப்படவில்லை என்றாலும் அவ்வாறு கொடுத்திருந்தால் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் இறந்த அன்பழகன் மனவளரச்சி குன்றியவர் என்று எந்த ஆவணத்திலும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். ம.சா.1 முதல் தகவல் அறிக்கையில் எனது மகன் வாய் பேச முடியாதவர் என்றுதான் கூறியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபத்தும் என்னுடைய கவனக்குறைவால் நடந்தது என்றாலும், இடதுபுறமாக செல்ல வேண்டிய நான் வலுதுபுறமாக ஏறி மேற்கு புறத்தில் நின்று கொண்டிருந்த தாவா விபத்தில் இறந்த போன அன்பழகன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட் டேன் என்றால் சரியல்ல. மேற்படி வபித்தும் என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதால் தான் மனுதாரர்களுக்கு பணம் கொடுப்பதாக பேச்சு வார்த்தை நடந்தினோம் என்பதால் மேற்படி மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் நான் மற்றும 2 ம் எதிர்மனுதாரர் சேர்ந்து வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

என்னுடைய கவனக்குறைவால் தான் நடந்தது என்றாலும் இழப்பீடு அதிகம் வழங்க வேண்டும் என்ற காரணத்தால் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

V SUNDARARAJ
Digitally signed by V SUNDARARAJ
Date: 2024.04.25 14:55:28 +0530

Chief Judicial Magistrate,
Sivagangai.